00165

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் IV
இறுதிப் பரீட்சை -2017/2018
ஒப்பந்தச் சட்டம் - **LWU 2311/LLU4805**
காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 22-02-2020 நேரம் : மு.ப 09.30 - பி.ப 12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08)
தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

பகுதி **I** இல் இருந்து ஒரு (01) வினாவிற்கும், பகுதி **II** இல் இருந்து நான்கு (04) வினாக்களிற்குமாக மொத்தம் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி – I முகவராண்மைச் சட்டம்

ஒரு (i) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.

1. ஷாலினி என்பவள் நகரத்தில் உள்ள பிரபல்யமான கேக் தயாரிப்பாளர் ஆவாள். அவள் 'கேக் டோக்ஸ்' எனும் கேக் கடைக்கு உரிமையாளராக இருந்ததுடன், 'கேக் டோக்ஸ்' இன் கோரிக்கைகளுக்கான விற்பனைகள் மற்றும் விநியோகம் என்பனவற்றை நிர்வகிக்க அவளின் முகவர்களாக மஹிம மற்றும் சமீர் ஆகியோரை நியமித்தாள். மஹிம 'கேக் டோக்ஸ்' இன் கேக்குகளை ஒரு கேக்கின் விலையில் 10% அதிகரித்து, ஷாலினி அறியாது விற்பனை செய்தான். மஹிம, ஷாலினிக்கிற்கு தெரிவிக்காது, நகரத்தில் 'கப் கேக் டோக்ஸ்' எனும் கடையைத் திறந்ததுடன், 'கேக் டோக்ஸ்' இன் வழமையான வாடிக்கையாளர்களிடம் இருந்து கப் கேக்கிற்கான கோரிக்கைகளை சேகரித்தான். அவனது கடையைப் பேணுவதற்காக, மஹிம, சமீரை வேலைக்கு அமர்த்தினான். 'கேக் டோக்ஸ்' இன் முகவராக இருக்கும் பொழுதே மஹிம 'கேக் டோக்ஸ்' இன் வாடிக்கையாளர்களிற்கு உண்மையில் அவனது 'கப் கேக் டோக்ஸ்' இனால் தயாரிக்கப்பட்ட குறைந்த தரம் கொண்ட சில கப்கேக்குகளை விநியோகித்தான்.

   'கேக் டோக்ஸ்' இன் வாடிக்கையாளர் விபரங்கள் மற்றும் வியாபார உத்திகள் என்பவற்றை அறிந்து கொண்ட பின், மஹிம தனது வேலையில் இருந்து விலகினான்.

   மஹிம வேலையில் இருந்து விலக முன்னர், வங்கி ஒன்றில் இருந்து "கேக் டோக்ஸ்",இன் பெயரில் ருபா.1 மில்லியன் பெறுமதியுள்ள கடன் ஒன்றை பெற்றிருப்பதை ஷாலினி அறிந்தாள்.

   மேலுள்ள பரிமாற்றங்களின் சட்ட விளைவுகளை முகவராண்மை சட்டத்தின் கீழ் விளக்குவதுடன், ஷாலினிக்கு அறிவுறுத்துக.

   (20 புள்ளிகள்)

2. கீழ் தரப்பட்டுள்ள கூற்றுக்களின் வலிதாந்தன்மையை ஆராய்க.

   i. முகவர் ஒருவர் அவனது / அவளது முதல்வருக்கு குறித்த கடமைகளை ஆற்ற கடமைப்பட்டுள்ளார்
   ii. மூன்றாம் திறந்தவர் ஒருவர் முகவருடன் மட்டும் ஈடுபட விரும்பும் போது, வெளிப்படுத்தப்படாத முதல்வர் அவ் ஒப்பந்தத்தில் தலையிட முடியாது.

(10X2 = 20 புள்ளிகள்)

பகுதி II – ஒப்பந்தச்சட்டம்

நான்கு வினாக்களுக்கு (04) மாத்திரம் விடையளிக்குக.

3. பின்வரும் ஏதேனும் நான்கு (04) வழக்குகளில் உருவாக்கப்பட்ட சட்ட கருத்தேற்புகளை விளக்குக.

   (அ) *Entores Ltd*,v. *Miles Far East Corporation* (1888) 20 A.B.D. 640
   (ஆ) *Central London Property Trust* v. *High Trees House Ltd* (1947) KB 130
   (இ) *Hasley* v. *Baxendale* (1854) 9 Exch 341
   (ஈ) *Carlill* v. *Carbolic Smoke Ball Co* (1893) 1 QB 256
   (உ) *Jayawickrama* v. *Amarasuriya* (1918)20 N.L.R at pp.293 & 294

(4x 5 = 20 புள்ளிகள்)

4. i. "சட்டமானது, குறித்த இயலாமைகளுடன் காணப்படுவோரை, அவர்களுக்கு முழு ஒப்பந்த தகைமையை வழங்காது பாதுகாக்கிறது". பொருத்தமான உதாரணங்களுடன் கருத்துரைக்குக.

   ii. பெரேரா என்பவன், விபத்து ஒன்றில் தனது தந்தையை இழந்த ஹேமா எனும் தனது பேத்தியை வளர்க்கிறார். அவர் ஹேமாவின் 16வது பிறந்தநாள் அன்று இரண்டு இலட்ச ரூபா பணத்தையும் வைர மோதிரத்தையும் அவளிற்கு பரிசாக அளித்தார். ஹேமாவின் தாய் சௌமியா, அப்பரிசை ஏற்றார். ஹேமா, வைர மோதிரத்தை தன் காதலரான லக்கிக்க என்பவனுக்கு அவர்களது உறவின் நினைவாக பரிசளித்தாள். அவள் இரண்டு இலட்ச ரூபா பணத்தை அவளது படிப்பிற்காக பெறுமதியான வியாபாரக்குறி கொண்ட மடிக்கணனி ஒன்றை வாங்கவும் பயன்படுத்தினாள்.

   மேலுள்ள பரிமாற்றங்களின் சட்ட விளைவுகளை ஆராய்க.

(10X2 = புள்ளிகள்)

5. பின்வரும் கூற்றுகளது வலிதாந்தன்மையை ஆராய்க.

   (அ) *Donatio Inter Vivos* , விதியாக கைமீட்கப்பட முடியாதவை ;
   (ஆ) ஒப்பந்த நிறைவேற்றம் ஆனது, ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அவ்வாறே உறுதி செய்யப்பட வேண்டும்.

(10X2 = புள்ளிகள்)

6. '… சில வேளைகளில் நியம வடிவத்தில் உள்ள ஒப்பந்தங்களின் நிபந்தனைகள் ஆனவை, ஒரு திறத்தின் பொறுப்புடமையை, அவ் ஒப்பந்தத்திற்கு இணங்குகின்ற மற்றைய திறம் எப்போதும் இணங்காத வண்ணம், எல்லைகளுக்கு அப்பாற் சென்று மட்டுப்படுத்துகிறது அல்லது நீக்குகிறது. இத்தகு சந்தர்ப்பங்களில் ஒப்பந்த திறந்தவர்களுக்கு இடையிலான பேரம் பேசும் அதிகாரத்தில் காணப்படும் சமத்துவம் இன்மை காரணமாக, ஒப்பந்தம் செய்வதற்கான சுதந்திரம் எனும் கருத்தேற்பு இன்றி போகிறது ஒப்பந்தத்தில் பாதிப்புற்ற திறத்தின் நிலையை போக்குவதற்காக பொதுச்சட்டம் குறித்த விதிகளை உருவாக்கியுள்ளது.'

*Law of Contract, Block II, The Open University of Sri Lanka,pg 7.*

மேலுள்ள கூற்றைக் கணிக்க. உமது விடையை பொருத்தமான வழக்குதாரண எடுத்துக்காட்டுக்களால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

7. i. "அவுள் அயிஸ்' என்பது ரயன் என்பவனிற்கு சொந்தமான தனியார் துப்பறியும் நிறுவனம் ஆனது துப்புகளை வெளிக்காட்டுவதற்கான சட்ட பதிவுகளை தேடல், கண்காணிப்புகளை மேற்கொள்ளல்; தொழிலை உறுதிப்படுத்தல் மற்றும் வழக்குகளின் சான்றுகளை சேகரித்தல் மற்றும் ஒரு நபர் பற்றிய தொழில், வருவாய் மற்றும் பிற விடயங்கள் என்பவற்றை உறுதி செய்தல் முதலான சேவைகளுக்கு பிரசித்தம் பெற்றது ஆகும். ரயன், 'அவுள் அயிஸ்' இற்கான வேலையாட்களை 'அவுள் அயிஸ்' இன் சேவை முடிவின் போது ஒப்பந்த முடிவுறுத்தலின் பின்னர் நாட்டில் உள்ள மற்றுமொரு துப்பறியும் நிறுவனத்தில் இரு வருட காலங்களிற்கு அவர்களால் பணியாற்ற முடியாது எனக் குறிப்பிடும் ஒப்பந்தத்தின் கீழ் பணிக்கு அமர்த்தினான்.

ராம் மற்றும் சீதா ஆகிய கணவன் மற்றும் மனைவி இருவரும் 'அவுள் அயிஸ்' இல் முறையே ஒரு தனியார் துப்பறிவாளர் ஆகவும், ஒரு வரவேற்பாளர் ஆகவும் பணியாற்றுகின்றனர். அவர்கள் 'அவுள் அயிஸ்' இன் வேலையில் இருந்து விலக திட்டமிடுவதால் தமது தொழில் ஒப்பந்தங்களின் வாசகங்களது வலிதாந்தன்மை தொடர்பில் உமது கருத்தை அறிய விரும்புகின்றனர். அவர்களிற்கு அறிவுறுத்துக.

ii '*in pari delicto potior est conditio defendentis*' என்பதன் பொருளை வழக்குதாரண எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(10X2 = 20 புள்ளிகள்)

8. ஒப்பந்தம் ஒன்றைப் பாதிக்கும் காரணிகள் மீதான பின்வரும் எவையேனும் <u>இரண்டு (02)</u> கூற்றினை உமது விடையுடன் தீர்ப்புச் சட்டங்களை எடுத்தக்காட்டி விளக்குக.

(அ) மௌனம் பிறழ்பகர்வு ஆகாது.

(ஆ) உரோம டச்சு சட்டம் ஆனது, ஒப்பந்த சட்டத்தில் மூன்றாவது வகையான பிழை ஒன்றை அங்கீகரிக்கிறது.

(இ) ஒப்பந்தம் ஒன்று, அவ் ஒப்பந்த திறத்தவர்களுள் ஒரு திறத்தின் இணைக்கம் தானாக அன்றி மற்றைய திறத்தவரின் வார்த்தைகளால் அல்லது நடத்தையால் செல்வாக்கு செலுத்தப்பட்டு, பெறப்பட்டு இருப்பின் வெறிதாக்கப்படலாம்.

(10 x 2 = 20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது